பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 29 வியாழக்கிழமை 13.01.2022 கதிர் 69

**இது ரகசியம் அல்ல!**

'சூடு கண்ட பூனை அடுப்பங் கரை நாடாது' என்பார்கள். ஆனால் இலங்கையில் அப்படி இல்லைப் போலும்.

சீனாவிலிருந்து சேதன உரத்தை இறக்குமதிசெய்ய முயன்று கொழும்பு பட்டபாடு தெரிந்த விடயம்தான். பக்கம்02 »

# வெலிக்கடைச் சிறைச்சாலைக் கலவரம்; ஆணையாளருக்குத் தூக்குத்தண்டனை

## கொழும்பு விசேட மேல்நீதிமன்றம் தீர்ப்பு

2012இல்வெலிக்கடைவிளக்க மறியல் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தின்போது 8 கைதிகள் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி இந்தச் சம்பவத்தின் போது சிறைச்சாலை ஆணையாளராகக் கடமையாற்றிய எமில் ரஞ்ஜன் லமாஹேவாவுக்கு மரணதண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் நியோமால் ரங்க ஜீவ வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த அமைதியின்மையின் போது, 27 கைதிகள் உயிரிழந்திருந்தனர்.

கொழும்பு விசேட மேல்நீதிமன்றத்தில் இந்த வழக்கு மீதான தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற போது மஹிந்த ஆட்சியே நிலவியது. தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராகச் செயற்பட்டார்.

# ராஜபக்ஷ அரசு 'பெயில்'

## யாழில் அடித்துக் கூறினார் சஜித்



(இ.கலையமுதன்)

தற்போதய அரசு ஒரு தோற்றுப்போன அரசு எனவும், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களும் தோற்றுவிட்டார்கள் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ☞2

# ஆசியாவின் பலம் வாய்ந்த நாடாக இலங்கை மாறும்!

## பிரதமர் மஹிந்த நம்பிக்கை



துறைமுகங்களை நிர்மாணித்து, இந்த நாட்டை கடல்சார் கேந்திர நிலையமாக மாற்றி, ஆசியாவின் பலம் வாய்ந்த நாடாக முன்னோக்கிச் செல்வோம் என்ற நம்பிக்கையை நாம் கைவிடவில்லை எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தெற்காசியாவின் கடல்சார் கேந்திர நிலையமான கொழும்புத் துறைமுக கிழக்கு முனையத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் நேற்று முற்பகல் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு கூறினார். ☞2

# முற்றவெளியில் இன்று விடுதலைப் பொங்கல்



(இ.கலையமுதன்)

தமிழ் அரசியல் கைதிகளில் விடுதலையை வேண்டி விடுதலைப் பொங்கல் இன்று காலை 10 மணிக்கு யாழ். முற்றவெளியில் குரலற்றவர்களின் குரல் அமைப்பால் ஒழுங்கு ☞10

# அரச நிறுவனங்களின் செலவினங்களை மேலும் குறைத்துக்கொள்ள நடவடிக்கை

அமைச்சுக்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களின் செலவினங்களை மேலும் குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கேட்டுக் கொண்டுள்ளார்.

அது தொடர்பில் ☞10

# கர்ப்பப்பையை அகற்றி துணியை வைத்து ஒப்பரேன் செய்ததால் பெண் உயிரிழப்பு

## பருத்தித்துறையில் சம்பவம்

நெல்லியடியிலுள்ள தனியார் மருத்துவமனையில் சத்திர சிகிச்சை செய்து கொண்ட பெண் கிருமித் தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

புற்றுநோய் காரணமாக கர்ப்பப்பையை அகற்றும் சத்திர சிகிச்சை முன்னெடுக்கப்பட்ட நிலையில் அவரது உடலில் துணி ஒன்று வைத்துத் தைக்கப்பட்டதால் கிருமித்தொற்று ஏற்பட்டுள்ளது. அதுவே உயிரிழப்புக்குக் காரணம் என சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, யாக்கருவைச் சேர்ந்த மனோன்மணி குலவீரசிங்கம் (வயது - 60) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். ☞2

# முழுமையான விசாரணைக்கு பருத்தித்துறை மன்று உத்தரவு

பெண்ணின் கர்ப்பப்பையை அகற்றி துணி வைத்து சத்திர சிகிச்சை முன்னெடுத்ததால் அவரது உயிரிழப்புக் காரணம் என சட்ட மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளநிலையில் சம்பந்தப்பட்ட தரப்புகளை இன்று மன்றில் முன்னிலையாகுமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், உயிரிழந்த பெண்ணின் சடலத்தை அடக்கம் செய்ய உத்தரவிட்டுள்ள நீதிவான் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறும் பொலிஸாருக்கு பணித்துள்ளார்.

நெல்லியடியிலுள்ள தனியார் மருத்துவனையில் சத்திர ☞10

# அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இவ்வருடம் தீர்வு வழங்கும் அரசு!

## பிரதமர் மஹிந்த உறுதி



நாட்டில் அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், தொழில் ரீதியிலும் என அனைத்து வழிகளிலும் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு இவ்வருடம் தீர்வுகளை அரசு வழங்கும்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் சமகால நிலைவரம் தொடர்பில் ☞2

# மன்னாரில் தயாரிக்கப்பட்ட குண்டே பொரளையில் மீட்பு





பொரளையில் உள்ள ஓல் செயின்ட்ஸ் தேவாலயத்தில் இருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்ட கைக்குண்டானது மன்னாரில் தயாரிக்கப்பட்டது எனத் தெரியவந்துள்ளது. ☞10

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சீனாவின் ஒரு நிறுவனத்திடமிருந்து 90 ஆயிரம் மெற்றிக் தொன் சேதன உரம் பெறுவதற்கு இலங்கை நிறுவனம் ஒன்றின் மூலம் 'ஓடர்' கொடுக்கப்பட்டது.

முதல் கட்டமாக அதில் 20 ஆயிரம் மெற்றிக் தொன் வந்து சேர்ந்தது. அதைப் பரீட்சித்த இலங்கைத் தரப்பு கேடு விளைவிக்கும் பக்றீரியாத் தொற்று இருப்பதால் அதை ஏற்க முடியாது என்றது.

பெரிய சர்ச்சை உருவெடுத்தது. அனுப்பிய உரத்துக்காக 80 லட்சம் அமெரிக்க டொலர்களை இலங்கை வழங்க வேண்டும் என சீன நிறுவனம் அடம் பிடித்தது.

பெற்றுக் கொள்ளாத பொருளுக்குப் பணம் வழங்கவே மாட்டோம் என்று பிடிவாதம் பிடித்தது கொழும்பு. சண்டப் பிரசண்டம் பண்ணினார் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமமே.

இந்த விவகாரத்தை ஒட்டி சர்ச்சை பூதாகாரமானதை அடுத்து, கடன் கொடுப்பனவுக் கடிதப்படி உரிய பணக் கொடுப்பனவை வழங்க மறுத்த இலங்கையின் மக்கள் வங்கியைக் கறுப்புப் பட்டியலில் சேர்த்து அறிவித்தது சீனா.

விடயத்தில் விட்டுக் கொடுத்துப் பின் வாங்கவே மாட்டோம் என மார்தட்டிய இலங்கை விவசாய அமைச்சர் திடீரென பம்மிக் கொண்டார்.

சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்குவருவதற்கு இரண்டுநாள்களுக்கு முன்னரே 69 லட்சம் அமெரிக்க டொலர்களை நட்ட ஈடாக செலுத்தியது இலங்கை. கைக்குக் கிட்டாத பொருளுக்கு சுமார் 150 கோடி ரூபாவை அழ வேண்டியதாயிற்று.

இப்போது அதே சீன நிறுவனத்திடமிருந்து 'ஓடர்' பண்ணிய எஞ்சிய சேதன உரத்தைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் இலங்கையின் அதே நிறுவனம் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி கடைசியில் அல்லது மார்ச் முற்பகுதியில் முதலாவது கப்பல் சேதன உரத்துடன் வந்து சேரும் என்றும் கூறப்படுகின்றது.

இப்போது கூறுங்கள், சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடும் என்பது சரிதானே...?

★ ★ ★

தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தியப் பிரதமருக்கு எழுதும் கடிதம் தொடர்பான சர்ச்சை குறித்து நேற்று இப்பத்தியில் விலாவாரியாகக் குறிப்பிட்டிருந்தேன்.

சில தினங்களுக்கு முன்னர் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவைத் தவிர ஏனைய தமிழ்த் தலைவர் கள் ஒப்பமிட்ட கடிதத்தைக் கைவிட்டு, புதிய கடிதம் ஒன்று சில - பல புதிய சேர்க்கைகளுடன் தயாராகியிருப்பது பற்றிய தகவலையும் கூறியிருந்தேன்.

அந்தக் கடிதம் முகவரியிடப்பட்டிந்தது இந்தியப் பிரதமருக்கு. அதில் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா ஒப்பமிட முன்னரே - ஏனைய தலைவர்கள் கையொப்பம் வைத்தவுடனேயே - அது வெளியே 'லீக்' ஆகி விட்டது.

ஆக, முகவரியிடப்பட்டவருக்கு போக முன்னர் - முழுமையாக ஒப்பமிட முன்னர் – அந்த ஆவணத்தை 'லீக்' செய்தவர் யார் என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசினர்.

ஊடகம் என்ற வகையில் முதலில் கனடாவில் இருந்து டி.பி.எஸ்.ஜெயராஜ் தமது புளொக் பக்கத்தில் அதனை விவரமாகப் பிரிசுரித்தமையால் – அவர் சுமந்திரனுக்கு வேண்டியவர் என்பதால் – சுமந்திரனே அந்தக் கடிதத்தைக் கசிய விட்டார் என அவரின் அரசியல் காழ்ப்புணர்ச்சித் தரப்புகள் 'கதை' பரப்பித் திரிந்தன.

இது குறித்து சுமந்திரனிடம் கேட்டேன்.

"ஐயையோ... எனக்கும் அதற்கும் தொடர்பில்லை. திருத்தி, தாங்கள் ஒப்பமிட்ட கடிதத்தின் பிரதி ஒன்றை சம்பந்தன் ஐயா என்னிடம் கையில் தந்தார். அதை கொழும்பில் வீட்டில் விட்டு விட்டு, நான் சிலாபம், மன்னார் என்று வழக்கு விடயங்களுக்காக அலையும் போது, தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம்தான் என்னுடன் தொடர்பு கொண்டு கடிதத்தின் வடிவம் டி.பி.எஸ்.ஜெயராஜின் இணையத் தள இதழில் வந்திருக்கும் தகவலைச் சொன்னார். அந்தக் கடிதத்தை நான் யாரிடமும் வெளியிடவில்லை.

"ஆனால், கொழும்பு வந்த பின்னர், கனடா, அமெரிக்கா, சுவிஸ் தூதரக அதிகாரிகளைத் தனித்தனியே சந்தித்தேன். மேற்படி தமிழ்க் கட்சிகளின் கூட்ட ஏற்பாட்டாளர்களே தலைவர்கள் ஒப்பமிட்ட கடிதத்தின் பிரதிகளைத் தங்களுக்கு மின்னஞ்சலில் அனுப்பி வைத்தார் என்று சாவதானமாகக் கூறினர். அவர்கள் மூலம்தான் அது போயிருக்கின்றது" – என்றார் சுமந்திரன்.

ஆக, இந்தியப் பிரதமருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் அவருக்கு அனுப்பட முன்னரே கொழும்பில் உள்ள மேற்குலகத் தூதரகங்கள் எல்லாவற்றுக்கும் தாராளமாக அனுப்பப்பட்டுள்ளன.

இதென்ன கூத்து? இது என்ன இராஜதந்திரம்? இதென்ன தொடர்பாடல் முறைமை? வடிவேல் பாணியில் கூறுவது என்றால் "இது என்ன சிறுபிள்ளைத் தனமான வேலை?"

செய்வது எல்லாம் செய்துவிட்டு தலையில் மிளகாய் அரைப்பதற்கு மட்டும், "செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் தலை மீது' என்ற கணக்காம். சுமந்திரனின் பெயரை மாட்டி வைப்பது சிலரின் வேலையாகிப் போய் விட்டது. பாவம் சுமந்திரன்...!

★ ★ ★

யாழ்.செயலகத்தின் 'இயர் – எண்ட்' பார்ட்டி நேற்றிரவு. இரண்டு கடா, முப்பது கிலோ கோழி இறைச்சி, பிறைட் ரைஸ் என்று ஒரே அமர்க்களம்.. போங்கள்.

சாப்பாட்டுக்கு முன்னும் பின்னரும் கூட, கூட்டம் கூட்டமாகக் கூடி நின்ற செயலக நண்பர்களின் குழுமங்களில் யாருடைய முகத்திலும் முகக் கவசத்தையே காணோம். 'பார்ட்டி' சூட்டில் கொரோனா வைரஸ் தலைதெறிக்க ஓடித் தப்பியிருக்கும் என்று நினைத்திருப்பார்கள் போலும்.

தவிரவும், முக்கால் லட்சத்துக்கு சிவபானத்தில் தாகம் தீர்த்தனர் என்றும் தகவல். ஆனால் செயலகத்தில் சாப்பாடும் ஒன்றுகூடலும் மட்டும்தான். பக்கத்தில் சேர்க்கியூட் பங்களா ஒன்றுதான் தண்ணீர்ப்பந்தல் என்றும் அறிந்தேன்.

பூஸ்டர் ஊசியும் போட்ட கெத்தில் கொரோனாவுக்கு ஆட்டம் காட்டுவதாக நினைப்புப் போலும்.

மக்கள் சேவையாற்றும் மகேசன்கள் வருடத்தில் ஒரு நாள் தங்களுக்கும் சேவையாற்றுவது என்ன தப்பா? ஆதலினால் அது பற்றி அதிகம் பேசாமல் விட்டு விடுவோம்.

– மின்னல் –

---

## ராஜபக்ஷ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணம் – நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளர்களின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நாட்டின் அரசானது மக்களில் அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாகச் செயற்பட வேண்டும்.

வெளிநாட்டில் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்து இந்த மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்க முடியாது இந்த அரசு திண்டாடுகின்றது.

தேர்தல் காலத்தில் பல்வேறுபட்ட வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்து தற்போது மக்கள் வாழ முடியாதுள்ளார்கள்.

குறிப்பாக உணவு, பானங்களை நாட்டுக்குள் கொண்டு வர முடியாத நிலை காணப்படுகின்றது. அரசுக்கு எதுவுமே செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. பொதுவாக குழந்தைகள், தாய்மாருடைய போஷாக்கு மட்டம் குறைந்திருக்கின்றது.

அவர்களுக்குரிய பால்மா மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இந்தக் கோட்டாபய அரசு காணப்படுகின்றது.

மக்கள் வாழ்வதற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது.

நாட்டுக்குத் தேவையான பொருள்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. ஆனால், வெற்றிகொள்வதற்கு வீர தீரமான அரசு, புத்திசாலித்தனமான அரசு எனக் கூறி தற்போது அரசு பலமில்லாத அரசாக மாறியுள்ளது.

இந்த அரசு முற்றுமுழுதாகப் பெயிலான அரசு என்றுதான் கூற வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக ஒரு பலமான அரசை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் ஒருங்கிணைய வேண்டும்.

குறிப்பாக நமது ஆட்சியில் இனவாதம், மதவாதம் மற்றும் ஒரு துண்டு நிலம் கூட வேறு நாட்டுக்குக் கொடுக்காத சிறந்த ஒரு நாட்டை உருவாக்குவதற்கு நாங்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் – என்றார்.

---

## அனைத்துப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு தற்போது சகல வழிகளிலும் பின்னடைவைச் சத்துள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இதற்குக் கொரோனாப் பெருந்தொற்றே காரணம். இதை மக்கள் நன்குணர்வார்கள். ஆனால், எதிரணியினர் இந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடிக்கத் துடிக்கின்றனர். அவர்கள் நாடடெங்கும் சென்று அரசுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

எதிரணியினரின் இந்தப் பொய்ப் பிரசாரங்களை எமக்கு ஆணை வழங்கிய மக்கள் நம்பவேமாட்டார்கள். ஏனெனில், அவர்களுக்கு உண்மை நிலைவரம் தெரியும்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் படுதோல்வியைச் சந்தித்தது. இந்தக் கட்சியால் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் கொண்ட எமது அரசை ஒருபோதும் வீழ்த்தவே முடியாது.

இவ்வருடத்தில் நாடு முன்னோக்கிச் செல்லும் வேலைத்திட்டங்களை நாம் ஆரம்பித்துள்ளோம். அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், தொழில் ரீதியிலும் என அனைத்து வழிகளிலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இவ்வருடம் தீர்வுகளை அரசு வழங்கும் – என்றார்.

---

## ஆசியாவின் பலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிழக்கு முனையத்தின் செயற்பாடுகளை இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழே முன்னெடுத்துச் சென்று இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படும் முனையத்தின் முழு நீளம் 1320 மீற்றராகும். பணிகள் மூன்று கட்டங்களின் கீழ் 2024 ஜூலை மாதமளவில் நிறைவுசெய்யப்படும்.

நிகழ்வில் பிரதமர் மேலும் உரையாற்றும்போது –

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் உங்களுடன் இணைந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இத்தருணத்தில் நமது நாட்டில் துறைமுகங்கள் நிர்மாணிக்கப்பட்ட கடந்த காலம் நினைவுக்கு வருகின்றது. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் எமது நாட்டில் புதிதாகத் துறைமுகமொன்றை நிர்மாணிக்க வேண்டும் என எண்ணியது 2005ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த எமது அரசே என்பதைக் கூற விரும்புகின்றேன்.

தடுத்து நாம் எதிர்கொண்டுள்ள கசப்பான சூழ்நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டும். கொரோனாத் தொற்றுநோய் நம்மை இழுத்துச் சென்றிருக்கும் படுகுழி இந்தத் துறைமுகத்தை விட ஆழமானது என்று நான் நினைக்கிறேன். அதை மக்களிடம் இருந்து மறைக்க விரும்பவில்லை.

மக்கள் எதிர்கொண்டுள்ள சிரமங்களுக்கு நாமே பொறுப்பு. பொருள்களின் விலையேற்றத்தைவிட வரிசையில் நிற்பது என்பது சிறந்த விடயமல்ல என எமது மக்கள் நம்மிடம் கூறுகின்றனர். எங்களுக்கு அது தெரியும். இந்த அரசு தமது சொந்த வசதியைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. தன் வசதி குறித்து மாத்திரம் சிந்திக்கும் அரசாக இருப்பின் நிதி நெருக்கடி நிலவும் போது மக்களுக்கு பல நூறு கோடி ரூபா நிவாரணம் வழங்க முடிவு செய்யாது.

நாட்டின் மீதான நம்பிக்கையை கைவிடாதீர்கள். கடந்து சென்ற இரண்டு வருடங்களை விமர்சகர்களுக்கு விட்டுவிடுவோம். எதிர்காலத்தை நாங்கள் பொறுப்பேற்போம் – என்றார்.

---

## கர்ப்பப்பையை அகற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெண்ணுக்குக் கர்ப்பப்பையில் ஏற்பட்ட புற்றுநோய் காரணமாக அதனை அகற்றுவதற்கு மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டது.

அதனால் நெல்லியடியில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் கடந்த டிசம்பர் 10ஆம் திகதி பெண் நோயியல் சத்திர சிகிச்சை வல்லுநர் ஒருவரால் பெண்ணின் கர்ப்பப்பை அகற்றும் அறுவைச் சிகிச்சை இடம்பெற்றது.

இந்தநிலையில், அந்தப் பெண்ணுக்குத் திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நேற்றுமுன்தினம் 10 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை சட்ட மருத்துவ வல்லுநர் கனகசபாபதி வாசுதேவா முன்னிலையில் பெண்ணின் சடலம் நேற்று உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.


சத்திரசிகிச்சையின்போது பெண்ணின் உடலுக்குள் 50 சென்ரிமீற்றர் நீளம் 10 சென்ரிமீற்றர் அகலமுள்ள துணி ஒன்று வைத்து தையலிடப்பட்டமை கண்டறியப்பட்டது.

அவரது உயிரிழப்புக்கு அந்தத் துணியால் ஏற்பட்ட கிருமித்தொற்றே காரணம் என்று சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# ஜெனரல் சவேந்திரசில்வா தடைக் கோரிக்கைக்கு பிரித்தானிய ஆயுத படை நிழல் அமைச்சர் ஆதரவு



இலங்கை இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்டவர்களை பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடை விதிப்பு அதிகாரசபையின் கீழ் தடை செய்வதற்கு பிரித்தானிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி, பிரித்தானிய ஆயுதபடைகளின் நிழலமைச்சரும் தொழிற்கட்சியின் போர்ட்ஸ்மவுத் தெற்கு தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஸ்ரிபன் மோகனுடன் உயர்மட்ட சந்திப்பு ஒன்று மெய்நிகர் வழியாக இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சட்ட ஆலோசகரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான கீத் குலசேகரம் தலைமையில் இடம்பெற்ற இந்த முக்கிய சந்திப்பில் ஐசிபிபிஜி பணிப்பாளர் அம்பிகை கே.செல்வகுமார் மற்றும் சில மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

கீத் குலசேகரம் தனது தலைமை உரையின் போது -

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் பல்லாயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமைக்;குக் காரணமான இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவைத் தடைசெய்யப் போதுமான ஆதாரங்களை ஏற்கனவே ஜரிஜேபி. மற்றும் ஐசிபிபிஜி ஆகிய அமைப்புக்கள் சமர்ப்பித்திருந்த போதும், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு இன்னும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியிருப்பதை சுட்டிக்காட்டினார்.


அத்துடன் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் மட்டுமன்றி, தற்போது இலங்கையில் தொடரும் ஆள் கடத்தல் மற்றும் சித்திரவதைகளும் சவேந்திர சில்வாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயுதப் படைகளே மேற்கொண்டுவருகின்றமையால் அதற்கும் சவேந்திர சில்வாவே பொறுப்பு என்றும், சந்திப்பில் கலந்து கொண்ட சித்திரவதைக்குள்ளானவர்கள் இதற்கு நேரடி சாட்சி என்றும் தெரிவித்தார்.


மேலும் தங்கள் தொகுதியில் உள்ள பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சார்பில் இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவைத் தடை செய்யக்கோரி எப்சிடிஓவிற்கு அழுத்தம் கொடுக்கும் படியும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொள்ளவதற்கு ஏதுவாகவும், தொடர்ந்து இலங்கையில் இடம்பெறும் சித்திரவதைகளை நிறுத்துவதற்கு ஏதுவாகவும் தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழு மற்றும் மக்நிட்ஸ்கை தடைகளிற்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழுக்களில் இணைந்து செயற்பட அழைப்பு விடுத்ததுடன் சவேந்திர சில்வாவைத் தடை செய்யக்கோரும் சிறிய காணொளியினை சமூக வலைத்தளங்களில் வெளியிடுமாறும் கேட்டுக் கொண்டார். மேலும் ஐசிபிபிஜியின் பணிப்பாளர் அம்பிகை கே.செல்வகுமார், இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவைத் தடை செய்வதற்கு அனுப்பிய கோரிக்கைகளுக்கு சரியான பதிலை எப்சிடிஓ தராதமை வருத்தத்தைத் தருவதுடன், கடந்த ஒரு சில மாதங்களுக்கு முன்னர் சித்திரவதைக்கு உள்ளாகியவர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான வாக்குமூலங்கள் மற்றும் ஆதாரங்களை ஐசிபிபிஜி திரட்டி வைத்திருப்பதாகவும், அவற்றை பிரித்தானிய அரசிற்கு வழங்கத் தயார் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சரை நேரில் சந்திக்க ஏற்பாடு செய்து தரும்படியும் கேட்டுக்கொண்டார்.

அனைவரின் கருத்துக்களையும் உள்வாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர், தனது முழுமையான ஆதரவை வெளிப்படுத்தியமையுடன், தமிழ் மக்கள் சார்பாக நாடாளுமன்ற விவாதங்களின் ஊடாக இவற்றை வெளிக்கொணர்ந்து உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள பிரித்தானிய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதாக உறுதியளித்துள்ளார். மேற்படி சந்திப்பில் சித்திரவதையில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களும் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுமான ஸ்ரீ அபிராமி, ஸ்ரீ. பாலேஸ்வரன் (ஒருங்கிணைப்பாளர்), நல்லதம்பி அரவிந்தராஜ், பவுல்ராஜ் பவிசன், நிலக்சன் சிவலிங்கம், சதேந்லொயிற்றன் புயலேந்திரன், காண்டீபன் கிறிஸ்ரி நிலானி ஆகியோர் உட்பட இன்னும் சிலர் கலந்து கொண்டனர்.

# கஞ்சா செய்கை முற்றுகையிடப்பட்டது படையினரால் அவை அழிக்கப்பட்டன





இராணுவப் புலனாய்வுப் பிரிவினரிடம் இருந்து கிடைத்த தகவலின் பேரில், மத்திய பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் கீழ் இயங்கும் 121 பிரிகேட் மற்றும் 12 ஆவது பிரிவின் கீழ் உள்ள 20 ஆவது இலங்கை சிங்கப் படையணியின் படையினரால் தனமல்வில வத்தேஹேரியகந்த பிரதேசத்தில் கஞ்சா செய்கை முற்றுகையிடப்பட்டு அழிக்கப்பட்டன.

சுமார் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட சட்டவிரோதமான சுமார் 3 லட்சம் ரூபா பெருமதியான இக் கஞ்சா செடிகள் காடுகளுக்குள் இரகசியமாக வளர்க்கப்பட்டுள்ளதுடன், பொலிஸாரின் மேற்பார்வையில் படையினரால் அனைத்து செடிகளும் அழிக்கப்பட்டன.

இந்த நடவடிக்கை 121 ஆவது பிரிகேட் தளபதி பிரிகேடியர் டி.யு.என். சேரசிங்க மற்றும் 20 ஆவது இலங்கை சிங்கப் படையணியின் கட்டளை அதிகாரி ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் படையினரால் மேற்கொள்ளப்பட்டது.

நாட்டில் இருந்து போதைப்பொருள் ஒழிப்பதை கருத்திற் கொண்டு ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் பாதுகாப்புப் பதவி நிலை பிரதானியும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க, மத்திய பாதுகாப்புப் படைத் தலைமைய தளபதி மேஜர் ஜெனரல் சமந்த சில்வா மற்றும் 12 ஆவது படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன ரணவக்கவின் வழிக்காட்டலின் கீழ் படையினரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

# விசேட தடுப்பூசி வாரம் நாட்டில் அறிமுகமானது

## அசேல குணவர்த்தன தெரிவிப்பு



நாட்டில் விசேட தடுப்பூசி வாரமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

எதிர்வரும் 17 ஆம் திகதி வரையில் இந்த தடுப்பூசி வார செயற்திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குள் மேலும் நான்கு தடுப்பூசி மத்திய நிலையங்கள் இயங்கும்.

தடுப்பூசி ஏற்றப்படும் வைத்தியசாலைகளில் இரவு 8.00 மணி வரையில் தடுப்பூசி ஏற்றப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# மாகாணை சபைத் தேர்தல் இந்த ஆண்டு நடைபெறும்!

## சிவநேசதுரை சந்திரகாந்தன் உத்தரவாதம்



மாகாணசபை தேர்தல் இந்த ஆண்டு நடைபெறும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவிக்கையில் -

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிற்போடப்பட்டமை நாட்டில் தற்போதைய பொருளாதார சூழ்நிலையைக் கொண்டு எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில் இந்த முடிவை அவர் எடுத்துள்ளார். ஆனால் தேர்தலுக்கு அச்சப்பட்டு இந்த முடிவை எடுக்கவில்லை.

கொவிட் அச்சுறுத்தலுக்குப் பின்னர் மக்களின் நிலையைக்கொண்டே இந்த நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்துள்ளது. இந்த நிலைமை சுமுகமானதும் நிச்சயமாக விரைவில் உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் நடைபெறும்.

ஆனால், மாகாண சபை தேர்தல் வருடக்கணக்கில் பிற்போடப்படும் என்று எந்த அறிவிப்பும் செய்யப்படவில்லை. இந்த வருட நடுப்பகுதியில் அல்லது இறுதிப்பகுதியில் நடைபெறும் என்று நான் கருதுகின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

# 3 லட்சம் மெற்றிக் தொன் அரிசிக்கு இறக்குமதி அனுமதி

உள்நாட்டு சந்தையில் அரிசியின் விலை எதிர்பாராத வகையில் உயர்ந்து வருவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, மக்களுக்கு நியாயமான விலையில் அரிசியை வழங்குவதற்குத் தேவையான அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. திறந்த சந்தையில் போதியளவு அரிசி கையிருப்பு இருப்பதை உறுதி செய்வதற்காக இவ்வாறு அரிசியை இறக்குமதி செய்ய வர்த்தக அமைச்சர் பந்துல குண வர்தன முன்மொழிந்துள்ளார்.

இதன்படி, 2 லட்சம் மெற்றிக் தொன் நாட்டரிசி மற்றும் சம்பா அரிசிக்கு மாற்றாக ஒரு லட்சம் மெற்றிக் தொன் ஜிஆர் 11 குறுகிய தானிய அரிசியை இறக்குமதி செய்வதற்கு வர்த்தக அமைச்சரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கர்தினால் போட்டு குண்டு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி நிர்வாகத்துக்கு எதிராக பெரும் அரசியல் குண்டு ஒன்றைத் தூக்கில் போட்டிருக்கின்றார் கொழும்புப் பேராயர் அதி வண. கர்த்தினால் மல்கம் ரஞ்சித்.

இவ்வளவு காலமும் சாடை மாடையாகக் குற்றம் சுமத்தி வந்த அவர் இப்போது நேரடியாக – நெற்றிக்கு முட்ட – குற்றச்சாட்டை அடுக்கியிருக்கின்றார்.

ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதலின் ஆயிரமாம் நாள் நினைவு, நாளைய தினம் – தைப்பொங்கலன்று – வருகின்றது. அதை ஒட்டி, மேற்படி ஈவிரக்கமற்ற தாக்குதலில் உயிரிழந்தோருக்காகப் பிரார்த்தனை செய்யும்படி வேண்டுகோள் விடுத்த அவர், மேற்படி தாக்குதலின் சூத்திரதாரிகள் இன்னமுமே சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படவில்லை, பொறுப்புக் கூறல் நிலை நிறுத்தப்படவில்லை என்ற விசனத்தில் – விரக்தியில் – எரிச்சலில் – சில விடயங்களை அப்பட்டமாகவும் வெளிப்படையாகவும் கூற முற்பட்டிருக்கின்றார்.

ஏற்கனவே மேற்படி தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் நல்லாட்சி அரசின் காலத்தில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையிலும் –

அதைத் தொடர்ந்து இவ்விடயத்தைப் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையிலும் –

உள்ள விடயங்களையே அவர் சுட்டிக்காட்டுகின்றார். ஆனால் அந்த இரண்டும் பூடகமாக – வார்த்தை ஜாலங்களில் – சோடித்து, விடயத்தை அப்பட்டமாகப் போட்டுடைத்திருக்கின்றார் கர்த்தினால் மல்கம் ரஞ்சித்.

“ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் படி –

“மேற்படி தாக்குதல் பற்றிய உளவுத் தகவல், நாட்டின் புலனாய்வுப் பிரிவின் சில தரப்புகளுக்கு முற்கூட்டியே நன்கு தெரிந்திருந்தும் உரிய – சம்பந்தப்பட்ட – அங்கங்களுக்கு (உஷார்ப்படுத்தும் விதத்தில்) அவை தெரிவிக்கப்படவேயில்லை. இத்தரப்புகள் வேறு விதமான உள்நோக்கங்களுக்காக இப்படித் தகவல்களைத் தெரிவிக்காமல் வேண்மென்றே மறைந்தனவா என்பதைக் கண்டறிய மேலும் விசாரணைகள் அவசியப்படுகின்றன.

“அத்தோடு, அந்த வருட இறுதியில் நடைபெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி குழப்பம் ஒன்றை ஏற்படுத்தும் இலக்கில் அத்தரப்புகள் அப்படிச் செயற்பட்டனவா என்பதும் ஆராயப்பட வேண்டும் என அறிக்கை கூறுகின்றது.

“இந்தத் தாக்குதல் பற்றிய தகவலை முற்கூட்டியே வெளிப்படுத்தாமல் மறைத்து, அது நடந்தேறுவதை உறுதிப்படுத்தி, அதன் மூலம் பெரும் குழப்பத்தை உருவாக்கி, வாக்காளர்களின் அனுதாபத்தை அப்போதைய அரசுக்கு எதிரான சக்திகளுக்கு ஆதரவாக அத்தேர்தலில் திருப்பும் திட்டத்துடன்தான் இப்படி உளவுத் தகவல்கள் மறைக்கப்பட்டனவா என்பதும் கண்டறியப்பட வேண்டும்.

“அத்தகைய குழப்பம் அரசுத் தலைமையை மாற்றும் ஆதரவு அலையை உருவாக்கும் எண்ணத்துடன் அரங்கேற அனுமதிக்கப்பட்டதா?” – என்று விலாவாரியாக நேற்றுக் கேள்வி எழுப்பியிருக்கின்றார் கர்தினால்.

அதாவது, பின்னர் நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில், கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கான அரசியல் களநிலைவரத்தை ஏற்படுத்தும் நோக்கில்தான் இத்தாக்குதல், தடுக்கப்படாமல், நடந்தேற இடமளிக்கப்பட்டதா என்ற கேள்வியை கர்த்தினால் மல்கம் ரஞ்சித் சுற்றி வளைத்துக் கேட்டிருக்கின்றார்.

அதனால்தானா இந்தத் தாக்குதல் பற்றிய முற்கூட்டிய உளவுத் தகவல்கள் தெரிந்திருந்தும் அவை தொடர்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கத் தவறிய தரப்புகளுக்கு எதிராக இந்த அரசு சட்ட, நீதி செயற்பாடுகளையும் பொறுப்புக் கூறல் ஒழுங்குகளையும் மேற்கொள்ளவில்லை என்பதுதான் கர்தினாலின் கேள்வி.

காலம் பிந்தியாவது உண்மைகள் அம்பலமானால் சரி.

# மாகாணசபைத் தேர்தல் இந்த வருடம் நடக்கும்!

### ரமேஸ் பத்திரன கூறுகிறார்



மாகாண சபைத் தேர்தலை இந்த வருடத்தில் நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

24 மாநகர சபைகள் , 41 நகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபைகளின் பதவிக் காலத்தை நீடித்து அதிவிசேட வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக கொழும்பில் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அமைச் சரிடம் கேள்வி எழுப்பப் பட்டது.

தேர்தலுக்கு அஞ்சி ஒரு வருடத்துக்கு பதவிக் காலத்தை நீடிக்க அரசாங்கம் தீர்மானித்ததா என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

# கொரோனாவைக் காரணம் காட்டி தேர்தலை ஒத்திவைக்கவேண்டாம்

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொரோனா தொற்று எனக் கூறி தேர்தலை ஒத்திவைக்க வேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபைகளின் பதவிக் காலத்தை நீடித்து அதிவிசேட வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் தூர இந்துனில் அமரசேன இந்த வேண்டுகோளை விடுத்தார்.

69 லட்சம் மக்களின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்ததாகத் தெரிவிக்கும் அரசாங்கம் தேர்



தலை நடத்த அஞ்சத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டார்.

மேலும் மக்கள் யாருக்கு ஆதரவை வழங்குகின்றார்கள் என்பதை அறிந்து கொள்ளவாவது தேர்தலை நடத்துங்கள் என தூர இந்துனில் அமரசேன சவால் விடுத்தார்.

# வாடகை வீட்டில் வாழும் நடுத்தர வருமானமுடைய குடும்பங்களுக்கு மலிவு விலையில் நிரந்தர வீடுகள்!

### அரசாங்கம் அறிவிப்பு

வீடு தேவைப்பட்டு வாடகை வீடுகளில் வாழும் குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு மலிவு விலையில் நிரந்தர வீடுகளை வழங்கும் முயற்சியில் ’சொந்துரு மஹால் நிவாச’ என்ற வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்படி, தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான ரன் பொக்குன கமவில் அமைந்துள்ள காணித்துண்டில் 72 வீடுகளை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வீடு அல்லது வீடமைப்பதற்கு காணியொன்று இல்லாமையால் வாடகை வீடுகளில் வாழ்கின்ற, உண்மையான வீட்டுத் தேவையுள்ள குறைந்த மற்றும் நடுத்தர வருமானங்கொண்ட குடும்பங்களுக்கு நியாய விலைக்கு நிரந்தர வீடுகளை வழங்கும் நோக்கில் சொந்துரு மஹல் எனும் பெயரிலான வீடமைப்புத் திட்டத்தை தேசிய வீடமைப்பு அதிகாரசபை மூலம் நடை முறைப்படுத்துவதற்கு கிராமிய வீடமைப்பு மற்றும் கட்டுமானங்கள் கட்டடப்பொருள்கள் கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு 5 லட்சம் ரூபா ஆரம்பத் தொகையாகச் செலுத்துவதற்கான ஆற்றல் இருக்க வேண்டியதுடன், வீட்டுப் பெறுமதியின் எஞ்சிய தொகை வருடமொன்றில் தவணைக் கட்டணமாக அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவைக்கேற்ப வங்கியின் மூலம் கடனைப் பெற்றுக்கொள்வதற்கும் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பால் மாவுக்குப் பதிலாக பாலைப் பயன்படுத்துக!

### அரசாங்கம் தெரிவிப்பு

சந்தையில் பால் மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில் அனைவரும் திரவப் பாலை பயன்படுத்த வேண்டும் என இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன கேட்டுக்கொண்டார்.

கொழும்பில் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர், பால் மாவை உட்கொள்ளும் நாடுகளில் இலங்கை முன்னணியில் இருப்பதாகக் கூறினார்.

இதேவேளை எந்தவொரு அரசாங்கமும் பொருள்களின் விலைகளை அதிகரித்து அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு மக்கள் வரிசையில் நிற்பதை விரும்புவதில்லை எனத் தெரிவித்தார்.

கொரோன தொற்றும் டொலர் தட்டுப்பாடுமே தற்போதைய நெருக்கடிக்குக் காரணம் என குறிப்பிட்ட அமைச்சர், கடந்த இரண்டு ஆண்டுகளில் கிட்டத்தட்ட 14 பில்லியன் அமெரிக்க டொலர்களை கொரோனா காரணமாக இலங்கை இழந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரம் எதிர்வரும் மூன்று மாதங்களில் வழமைக் குத் திரும்பும் எனவும் அமைச்சர் ரமேஷ் பத்திரன நம்பிக்கை வெளியிட்டார்.

சவால்களை முறியடித்து நாட்டை சரியான பாதையில் இட்டுச் செல்வதில் தற்போதைய அரசாங்கம் உறுதியுடன் இருப்பதாகவும் அமைச்சர் அமைச்சர் ரமேஷ் பத்திரன குறிப்பிட்டார்.

# ஜனவரி 18 ஆம் திகதி முதல் வீட்டிற்கு வந்து மருத்துவம்!



யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தால் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் வீட்டில் இருந்து வைத்தியசாலைக்கு அழைத்து வர முடியாத நிலையிலுள்ள முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மோசமடைந்து செல்லும் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், படுக்கையில் உள்ள நோயாளர்களுக்கு வீட்டில் வழங்கக்கூடிய வைத்திய பராமரிப்பு சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என வட மாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

இந்தத் திட்டம் பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை போன்ற ஆதார வைத்தியசாலைகள் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த சிறப்பு பராமரிப்பு தேவையானவர்கள் தமக்கு அருகில் உள்ள மேற்கூறப்பட்ட வைத்தியசாலைகளில் ஏதாவது ஒன்றுக்குரிய கீழே வழங்கப்பட்ட தொலைபேசி இலக்கங்களுக்கு காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை அழைப்பதன் மூலம் தமக்கு வழங்கப்பட வேண்டிய பராமரிப்பை முன்பதிவு செய்ய வேண்டும்.

அதன் பின் அந்த வைத்தியசாலையில் இருந்து மருத்துவ பராமரிப்பு குழுவினர் நோயாளியின் வீட்டுக்கு வருகை தந்து அவர்களுடைய நோய் நிலமையை ஆராய்ந்து வீட்டில் வழங்கக்கூடிய வைத்திய பராமரிப்பை வழங்குவார்கள்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை – 021226 3262 தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை – 021205 9227 சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை –021227 1150 ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை – 0212211660 இந்தச் சேவை மூலம் அவசர வைத்திய சேவைகள் எதுவும் வழங்கப்படமாட்டா.

இந்தச் சேவை மூலம் அவசர தேவைகள் அற்ற பராமரிப்பு மட்டுமே வழங்கப்படும். (உதாரணமாக – உணவு வழங்கும் குழாய், சிறுநீர் குழாய் மாற்றுதல், மருந்து கட்டுதல், வீட்டில் வழங்கக்கூடிய இயன் மருத்துவ சேவைகள் போன்றவை) அவ்வாறு அந்த நோயாளிகளுக்கு அவசர வைத்திய தேவைகள் ஏற்படின் 1990 அவசர அம்புலன்ஸ் சேவையை அழைப்பதன் மூலம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல முடியும். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு ஒன்று மீட்பு!

பொரளையிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றிலிருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த தேவாலயத்தின் பணியாளர் ஒருவர் குறித்த கைக்குண்டை அடையாளம் கண்டு வழங்கிய தகவலுக்கு அமைய பொலிஸார் இதனை மீட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார். இந்தநிலையில் இதுதொடர்பாக சந்தேகத்தின் பேரில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தனி நடிப்பில் யாழ். நடேஸ்வரா முதலிடம்



வடமாகாண கல்வி அமைச்சுடன் இணைந்து செயல் திறன் அரங்க இயக்கம், கலாநிதி விஜயரத்தினம் கென்னடி ஞாபகார்த்தமாக நடத்திய தனிநடிப்பு போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் காரைநகர் இந்துக்கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை மிகச்சிறப்பாக நடைபெற்றது.

'பேரிடரை வெல்வோம்' என்ற தலைப்பில் வடக்கு மாகாண ரீதியில் நடைபெற்ற இந்த நாடகப்போட்டியில் யாழ். நடேஸ்வரக் கல்லூரியின் மாணவி செல்வி வானுப்பிரியா சிவசுப்பிரமணியம் முதலாவதிடத்தைப் பெற்று ரூபா 25 ஆயிரம் பணப்பரிசிலை பெற்றுக் கொண்டார். இரண்டாவது இடத்தை பருத்தித்துறை வடஇந்து கனிஷ்ட வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் றிச்சட் சீன் சாமுவேல் பெற்றுக்கொண்டு 15 ஆயிரம் ரூபா பணப் பரிசிலையும் பெற்றுக்கொண்டார்.

மூன்றாம் இடத்தை திருக்குடும்ப கன்னியர்டம் தேசியப்பாடசாலையைச் சேர்ந்த செல்வி டனோஜா எட்வின் பெற்றுக் கொண்டதோடு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசிலை பெற்றுக் கொண்டார்.

மேலும் சிறந்த ஆற்றுகைகளாக முல்லைத்தீவு றோ.க.த.பெண்கள் பாடசாலை மாணவன் செல்வன் தக்சயன் உதயகுமார் மற் றும் பருத்தித்துறை செ.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த செல்வி திவ்யா பாலசுப்பிரமணியம் ஆகியோரின்; தனிநடிப்பு ஆற்றுகை தேர்வாகியிருந்தன.




# 50 குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள்

## கிளிநொச்சியில் வழங்கல்!

கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் ஒழுங்குபடுத்தலில் 50 குடும்பங்களுக்கான பொங்கல் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது

கல்விக்காக ஏங்கும் 'கனவிற்கு விழியாய் நாமும் இணைவோம்' எனும் அமைப்பின் நிதி பங்களிப்பில் கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் ஒழுங்ககுப்படுத்தலில் 50 குடும்பங்களுக்கான பொங்கள் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை காலை 11.30மணியளவில் கிளிநொச்சி மாவட்ட மாற்று வழுவுள்ளோர் சங்கத்தின் வாளாகத்ததில் இடம் பெற்றது. சங்கத்தின் தலைவர் ஜெயக்குமார் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

# யாழ்ப்பாணம் தையிட்டியில் முன்பள்ளி கட்டடத்தை திறந்து வைத்தார் சஜித்!





எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் – தையிட்டியில் முன்பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

வடக்கு மாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சி தலைவர் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டு வருகின்றார்.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமைகாலை தையிட்டி கலாவல்லி முன்பள்ளியின் புதிய கட்டடத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ திறந்து வைத்துள்ளார். குறித்த கட்டடம் 'றாகம' நிறுவனத்தின் அனுசரணை ஊடாக நோர்வே பல்கலைக்கழக மாணவர்களின் நிதிப்பங்களிப்புடன் கடந்த 2020 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் மூன்றாம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு கடந்த செவ்வாய்க்கிழமை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது மாணவர்கள் சான்றிதல் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன, ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமா சந்திரபிரகாஸ், மாவட்ட அமைப்பாளர் வ.பிரபாகரன், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 250

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

### 643.எப்படியான போட்டிகள் விடுதலைக் குழுக்கள் இடையே எழுந்தன?

1977 ஆம் ஆண்டில் இருந்து 1983ஆம் ஆண்டுவரை தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியம், மற்ற அமைப்புகள் எல்லாம் தந்த வாழ்வாதார, புனர்வாழ்வு நிதித் திட்டங்களெல்லாம் 1981,1983 ஆம் ஆண்டுக் கலவரங்களில் அழிக்கப்பட்டு, பின்னர் மேலும் அதேவிதமான வாழ்வாதார நிதிகளுக்கான திட்டங்கள் நடை முறைப் படுத்தப்பட்டன. மக்களின் கைகளில் எதுவித அதிகாரங்களும் இல்லாத நிலையில், அரசாங்கமும் பாதுகாப்புப் படையினரும் அவற்றை வேட்டையாடினர். ஒப்பந்தத்தின் பின் ஒரு நிலைத்த தன்மை


ஈரோஸ் பாலகுமார்

வரலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. 1983 இலிருந்து 1987 காலப்பகுதிகளில் பல பல அமைப்புக்கள் அரசாங்கத்தின் உள்ளீடுகளோடும் தோன்றியிருந்தன. ஈரோஸ் திருகோணமலையில் திருகோணமலை பிரதேச வளர்ச்சி நிறுவனம் (Trincomalee District Development Foundation) என்ற பெயரில் அங்கு அமைப்பை தோற்றுவித்துப் படிப்படியாக பணிபுரியும் நிறுவனங்களை அதற்குக் கீழே கொண்டு வருவதற்கான திட்டங்கள் இருந்தன. இதே போல் வேறு சில தரப்புக்கள் யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருந்த புனர்வாழ்வு தகவல் மையத்தை (Rehabilitation Data Center) யாழ்ப்பாண புனர்வாழ்வு கூட்டமைப்பு (Jaffna Rehabilitation Consortium) என்று சில அமைப்புக்களோடு சேர்ந்து நடத்துவதற்கு முஸ்தீபுகள் மேற்கொண்டன. இவற்றின் நடுவே திருகோணமலையில் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவாக அரசசார்பற்ற நிதியங்களை ஏற்படுத்தி, அவற்றை வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் இணைப்பது நல்லதென்ற திட்டத்தைச் சமர்ப்பித்தார். அதன் அடிப்படையில் தமிழர் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் பெயரில்ஒரு மனுவை கந்தசாமி தயாரித்து அப்படியான ஒரு அமைப்பை North - East Province Consultation என்று அழைக்கலாம் என அனுப்பினார். அது ஈரோஸின் கையிலும் போய்ச் சேர்ந்தது. அது கிடைத்ததும் ரவி, வசந்தன், அன்ட்றூ யோசப் என்ற ஈரோஸ் அமைப்பின் மூவர் கந்தசாமியை மார்ச் 1988 இல் சந்தித்து தமிழர் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் (TRRO Ltd) சார்பில் அப்படியான மனுவை அனுப்புவதற்கு யார் அதிகாரம் தந்தது? அவருக்கு அவர்களுடன் இருக்கும் உறவு என்ன? எந்தவொரு புனர்நிர்மாண வேலைகளும் அவர்களது கொள்கைகளுக்கு மாறாக நடத்தப்படக் கூடாது, அப்படியில்லாமல் நடக்க முற்படுபவர்கள் சர்வோதயத்தில் பணிபுரிந்த கதிரமலைக்கு நடந்ததை நினைவிற் கொள்ள வேண்டும், அப்படியாக தங்களதும் விடுதலைப் புலிகளினதும் அனுமதியோடு செய்யப்படாதவை சிதைக்கப்படும் எனவும் எச்சரித்துப்போனார்கள்.

கோடிக்கணக்கான அமெரிக்க டொலர்களுக்கு பெறுமானமான புனர்வாழ்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த சர்வதேச அரசசார்பற்ற நிதியங்களோடு ஏற்பாடு செய்து கொண்டு வந்திருந்த கந்தசாமி இவற்றால்தான் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தில் தாம் யார் என்ற கேள்வி எழுந்துள்ளதையும்,அதன் யாழ்ப்பாண அமைப்புக்குள்ளேயே இயக்கங்கள் தர்பார் நடத்துவதை யும் உணர்ந்து வழிவகைகளுக்கு என்னுடன் தொடர்பு கொண்டார்.

### 644.புனர்வாழ்வுக்குத் தரப்படும் நிதி விடுதலைப் போராளிகளால்தான் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தங்களா அவை?

தமிழ் மக்களுக்காக எனத் தரப்படும் நிதிகள் தமிழரது விடுதலைக்காக தரப்படுபவை, அவை தங்களது போராட்டங்களால்தான் பெறப்படுகின்றன, ஆகவே அது ஒரு குத்தகையாக தங்களுக்கு வந்து சேரவேண்டும் என்பது அவர்களது நோக்கம். அந்த மனப்பாங்கு விடுதலைப் புலிகளிலும் ஈரோஸிலும் அதிகமாக இருந்தது. ஓரளவில் ஈரோஸ் தாங்கள் இந்தப் பரப்பைத் தங்களது ஆளுமைக்குள் கொண்டுவர எடுத்த முயற்சிகளுக்கு கந்தசாமியை முட்டுக்கட்டையாகப் பார்த்தார்கள்.

ஒப்பந்தத்தின் பின் ஜனவரி 1988 இல் நாடு திரும்பிய கந்தசாமி நிதியம் உதவி செய்த திட்டங்களைப் பார்வையிட்டு, குறைபாடுகளை ஆராய்ந்து, அடுத்த வருடத்துக்கான திட்டங்களையும் அவை நிர்வகிக்கப்பட வேண்டிய முறைகளையும் கோடி காட்டினார். இவற்றுக்கான அறிவுறுத்தல்களை ஈரோஸ் எதிர்த்து தாங்கள் அமைத்துள்ள புனரமைப்பு நிதியங்கள் ஊடாகவே கந்தசாமியும் இயங்க வேண்டும் என நிர்ப்பந்தித்தனர். அவருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் ஈரோஸ் திருப்திப்படாததால் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தின் பணிப்பாளர்களை அணுகி கந்த சாமிக்கும் அவர்களுக்கும் எதுவித தொடர்புகளும் கிடையாது, அவர் நிதியத்தின் எந்த பதவியிலும் இல்லை என பொது அறிவித்தல் விட வேண்டும் என அதிகாரப்படுத்தினர். தலைவர் கலாநிதி சிவத்தம்பியோ மற்றவர்களோ அதற்கு விருப்பப்படவில்லை. சில சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஈரோஸின் முக்கிய தலைவர் பாலகுமாருடன் நடத்தப்பட்டாலும் அவையும் குரோதமானவையாகவும் ஆக்ரோஷமானவையாகவும் தான் இருந்தன. சில சில பகுதிகளில் நடத்தப்படும் புனர்வாழ்வுத் திட்டங்கள் தங்களிடமே கையளிக்கப்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தங்களும் வைக் கப்பட்டன. முன்னர் கூறியபடி தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் இயங்கிக்கொண்டிருந்ததே யொழிய பதிவு செய்யப்படவில்லை. தன்னார்வ சமூக சேவை நிறுவன (பதிவும் மேற்பார்வையும்) Voluntary Social Services Organi - zation (Registr - ation and Super visions ) Act 31 of 1980 அமுலுக்கு வந்திருந்தது. சன்சோனி ஆணைக்குழுவின் முன் நிதியத்தை அது ஈடுபட்டிருந்த பணிகளின் அடிப்படையில் பொதுத் தொண்டு நிறுவனமாகக் கணிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்கு அவர் பரிந்துரையும் தந்திருந்தார். ஆனால் 'தமிழ்', 'அகதி' என்ற வார்த்தைகள் விலத்தப்பட வேண்டும் என்பதால் அது நடைபெறவேயில்லை. அந்தச் சட்டத்தின் பிரகாரம் அப்படியான நிறுவனத்தின் கூட்டங்களில் பங்கு பற்ற அரச அதிகாரிகளுக்கு அதிகாரம் இருந்தது. நிதியத்துடன் இணைந்து இயங்கிய இவ்வாறான தன்னார்வ நிறுவனங்களுக்கு இனவாதிகளினால் இடர்கள் வரலாம் என்ற ஆதங்கத்தில் நிதியம் இந்த திட்டங்கள் எல்லாவற்றையும் முறையாக சட்ட ரீதியாக பதவிலிருந்த TRRO


கந்தசாமி

என்ற கம்பனிக்கு மாற்றச் சிந்தித்தோம். நிதியத்தில் இருக்கும் தற்போதைய நிலைமைகள் என்ற 31 மே 1988 குறிப்பையும், ஈரோஸ் உடனான சந்திப்புக்கள் என 3 ஜனவரி 1988 இல் எழுதிய குறிப்பையும் கந்தசாமி எனக்கு அனுப்பிவிட்டுப் பேசிய பொழுது தான் ஜூன் மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் போய் இவை பற்றி நிதியத்தின் பொறுப்பாளர்களுடன் கதைத்து அவை சரியாகவில்லை எனப்பட்டால் என்னை உடனடியாக வரும்படியும் கேட்டிருந்தார்.

TRRO Ltd ஆரம்ப காலத்திலிருந்தே இயங்குநராக இருந்ததால் என் மூலம் நிலைமைகள் பற்றி ஆவணங்கள் சமர்ப்பித்து நீதிமன்ற நடவடிக்கை ஒன்றை எடுப்பது அவர் எண்ணமாக இருந்தது. ஆனால் 19 ஜூன் 1988இல் யாழ்ப்பாணத்திற்குச் சென்றபோது அவர் பேச்சுவார்த்தைக்கு வான் ஒன்றில் கூட்டிச் செல்லப்பட்டு, அதன் பின் அவர் காணப்படவில்லை. அவருடைய விடுதலைக்காக எவ்வளவோ சர்வதேச அமைப்புகளும் அபிமானம் பெற்றவர்களும் கோரிக்கை வைத்தார்கள். இன்றுவரை அவர் காணாமல் போனவர்களில் ஒருவர்.


ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

– வளரும் –

# அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்திற்குள்ளேயே தமது செல்வாக்கை முற்றுமுழுதாக இழந்துள்ளது

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சாடல்

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்திற்குள்ளேயே தமது செல்வாக்கை முற்று முழுதாக இழந்து இருக்கின்ற ஒரு நிலையிலேதான் இன்று தேர்தல்கள் அனைத்தையும் பிற்போடுகின்றது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

காரைநகர் சலோம் தேவாலயத்தில் இடம்பெற்ற மக்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

எந்த ஒரு நாடும் ஜனநாயகத்தை மதிக்கின்ற நாடாக இருந்தால் அந்த நாட்டினுடைய தேர்தல்கள் குறிப்பிட்ட காலத்தினுள் நடைபெற வேண்டும். வழமையாக நான்கு வருடம் அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை அந்த நாட்டினுடைய கட்டமைப்புக்கு அமையத் தேர்தல்கள் மக்களுடைய ஆணையைப்பெற்று நடத்தப்பட வேண்டும் என்பதுதான் முறை.

ஆனால் எங்களது நாட்டில் தேர்தல்களை நடத்தாமல் தள்ளிப்போடுவது என்பது ஒரு சாதாரண விடயமாக இன்று இருக்கிறது.

மக்களது ஆணையைப் பெற்றவர்கள் மக்கள் மத்தியிலே தங்களது நம்பிக்கையைத் தக்கவைக்க முடியாத நிலையிலேயே அடுத்த தேர்தல் வருவதற்கிடையே உள்ள மற்ற தேர்தலை நடத்தாமல் பிற்போட்டு மக்களையும் ஏமாற்றிக்கொண்டு போவதுதான் வழமை.

அதுபோல இன்று இந்த அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தங்களுக்கு இருக்கின்றது எனக் கொக்கரித்துக்கொண்டு இருந்து உள்ளூராட்சித் தேர்தல்களில் முகங்கொடுக்க முடியாத அளவுக்கு அல்லது மாகாண சபை முறைமைக்கு முகங்கொடுக்க முடியாத நிலையிலே, அனைத்து தேர்தல்களையும் பிற்போடுகின்ற வகையிலேதான் அவர்களது செயற்பாடுகள் அனைத்தும் உள்ளன என தெரிவித்துள்ளார்.



# நல்லூர் கந்தனை தரிசித்தார் சஜித்!



எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ நேற்று (புதன்கிழமை) காலை வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

வடக்கு மாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சி தலைவர் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டு வருகின்றார்.

இந்த நிலையில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் பிறந்த தினமான நேற்று காலை காலை 10 மணியளவில் அவர் நல்லூர் கந்தன் ஆலயத்துக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் வருகையால் நல்லூர் ஆலய சூழலில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தகராறில் தள்ளிவிட்டு ஒருவர் பரிதாப சாவு

இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிவிதிகல - கிரிமடுவ கோட்டத்தின் கீழ் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது ஒருவரைத் தள்ளும் போது தவறி விழுந்ததன் காரணமாக அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக சந்தேக நபர்கள் இந்த கொலையைச் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் கீழ் நிவித்திகல, கிரிமடுவ லைம பகுதியைச் சேர்ந்த 77 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை நிவித்திகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் 10 தேர்தல் தொகுதிகளிலும் தொழிற்சாலை காங்கேசன்துறையில் வைத்து உறுதி அளிக்கிறேன்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உத்தரவாதம்



எமது ஆட்சியில் யாழில் உள்ள பத்துத் தேர்தல் தொகுதிகளிலும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு மாவை கலட்டி, கொல்லங்கலட்டி பகுதியில் இடம்பெற்ற மக்களுடனான கலந்துரையாடலிலே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அனைவரும் அறிவீர்கள். நாட்டில் படித்த இளைஞர், யுவதிகளுக்குச் சிறந்த தொழில் வாய்ப்பு இல்லாத நிலையில் சிறந்த திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவதற் குரிய தலைமைத்துவமும் இல்லை.

யாழ் மாவட்டத்தில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகள் பத்து தேர்தல் தொகுதிகள் உள்ள நிலையில் இவை அனைத்துக்கும் சென்றவன் என்ற அடிப்படையில் மக்கள் பிரச்சினைகள் பற்றி நன்கு தெரியும். குளிரூட்டப்பட்ட அறைகளிலிருந்து கொண்டு காங்கேசன்துறை மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

நாட்டில் வாழும் மக்கள் மத்தியில் பல்வேறு தேவைப்பாடுகள் மற்றும் தீர்க்க வேண்டிய பல பிரச்சினைகள் உள்ளமையை நான் அறிவேன். அதன் காரணமாகவே இயலுமானவரை மக்கள் மத்தியில் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டு வருகிறேன்.

யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வந்திருக்கிறேன். காங்கேசன்துறையில் வைத்து என்னால் உறுதிமொழியை வழங்கமுடியும். யாழ். மாவட்டத்தில் உள்ள 10 தேர்தல் தொகுதிகளிலும் 10 தொழிற்சாலைகளை எனது ஆட்சியில் நிறுவுவேன்.

நாட்டில் தற்போது மக்கள் நிம்மதியாக வாழமுடியவில்லை. ஆட்சியாளர்கள் தொடர்பில் மக்கள் விரக்தியின் விளிம்பில் சென்றிருக்கிறார்கள். ஆகவே, மக்களைப் புறந்தள்ளி நடக்கும் அரசாங்கத்துக்கு எதிராக மக்களுடன் மக்களுக்காகப் பயணிக்கும் அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்கிரமரத்ன, புத்திக பத்திரன மற்றும் சஜித் பிரேமதாஸவின் இணைப்புச் செயலாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளருமான உமா சந்திரபிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டமையுடன், குறித்த நிகழ்வை ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வன்னியசிங்கம் பிரபாகரன் ஒழுங்கு செய்திருந்தார்.







எதிர் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச இலங்கையின் வடக்குக்கான சிறப்பு பயணத்தில் - யாழ்மாவட்டத்தில் கைத்தொழில்களை ஊக்குவிக்கும் முகமாகவும் தொழில் முனைவோரை சந்திக்கும் முகமாகவும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் வெஸ்டா பழரசபானங்கள் தயாரிப்பகத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டபோது .....

# புதிய யுகம் நோக்கி பயணிக்க மக்கள் சக்தியுடன் இணைக!

## கரவெட்டியில் சஜித் அழைப்பு

புதிய யுகம் நோக்கி பயணிக்க ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ யாழ். மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு வருகின்றார்.

இந்த நிலையில் கரவெட்டியில் கட்சியின் உடுப்பிட்டி தொகுதி அமைப்பாளர் அகிலதாசின் ஏற்பாட்டில் தைப்பொங்கலுக்கு பொங்கல் பொருள்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு -

ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக இருந்து கொண்டும் அரசியலில் மட்டும் கவனம் செலுத்தாது மக்களின் சுகாதாரம், கல்வி போன்ற விடயங்களிலும் அவதானம் செலுத்தி வருகின்றது.

குறிப்பாக நாடு முழுவதிலும் உள்ள பின்தங்கிய வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்கி வைத்துள்ளதோடு பாடசாலைகளுக்குத் தேவையான நவீன கல்வி பயிலும் உபகரணங்களையும் வழங்கி வருகின்றோம்.

இவ்வாறான சேவையை வழங்குவதையிட்டுப் பெருமையடைகின்றேன். ஏனென்றால் எந்த ஓர் எதிர்க்கட்சியும் இவ்வாறு செயற்பட்டமை கிடையாது.

குறிப்பாக எதிர்க்கட்சியாக உள்ளவர்கள் அரசியலில் மட்டும் கவனம் செலுத்துவார்கள். நாங்கள் ஒரு புதிய கட்சி. ஆனால் நாங்கள் புதிய யுகத்துக்கான பயணத்தை நோக்கிப் பயணிக்கின்றோம்.



தற்போது மக்கள் அரசாங்கத்தை வெறுக்கின்றார்கள். ஏன் இவர்களுக்கு வாக்களித்தோம் என்று எண்ணும் அளவிற்கு நிலைமை காணப்படுகின்றது.

ஆனால், நாங்கள் எல்லாவற்றையும் உற்றுநோக்கிச் செயற்படுகின்றோம். எனவே, அனைத்து மக்களும் எமது ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் புதிய யுகத்தை நோக்கிப் பயணிக்க முடியும். - என்றார்.

# செட்டிகுளம் பிரதேச செயலர் அனுமதியுடன் பல நூறு ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டன!

## திலீபன் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் பல நூறு ஏக்கர் காடு அழிப்பு வேலைகள் நடைபெறுகின்றன என மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு. திலீபன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் தொடர்ந்து காடுகளை அழித்து காணி அபகரிப்பு வேலைகள் நடைபெறுகின்றன எனக் கடந்த சில மாதங்களாக எனக்குப் பல்வேறு நபர்களால் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

அதற்கமைவாக, எவருக்கும் அறிவிக்காமல் சின்னசிப்பிக்குளம் கிராம சேவையாளர் பிரிவிற்கு நான் திடீர் விஜயம் மேற்கொண்டேன்.

அங்கு பிரதேச செயலாளரின் 2 ஹெக்டேயருக்கான அனுமதி கடிதத்துடன் 100 ஏக்கருக்கு மேல் காடழிப்பு நடைபெற்றுக்கொண்டிருப்பதை அவதானித்து உடனடியாகத் தடுத்து நிறுத்தினேன்.

வவுனியா மாவட்ட செயலாளர், வனவள திணைக்களத்தினர் ஆகியோருக்குத் தகவலையும், வீடியோ ஆதாரத்தையும் வழங்கியுள்ளேன். சாதாரண மக்கள் ஒரு சிறு தடியை வெட்டினால் கூட வனவளத் திணைக்களத்தினர் வழக்கு போடும் நிலையில் இப்படியான செயற்பாடு எப்படி நடைபெற்றது.



அதேபோல், பிரதேச செயலாளரின் அனுமதிக் கடிதம் வழங்கிய பின் அந்த இடத்துக்கு கிராம சேவையாளர் கூட சென்று பார்க்காமல் இருந்தமை ஏன்?, பிரதேச செயலாளர் வழங்கிய கடிதத்தில் பொலிஸாருக்கு பிரதி போட்டிருந்தும் ஏன் பொலிஸார் செல்லவில்லை? என பொதுமக்கள் என்னிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேபோன்று, மேலும் பல ஏக்கர் காணிகள் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன என குற்றச்சாட்டுக்கள் வந்துள்ளன. கிடைக்கப்பெற்ற அனைத்து முறைப்பாடுகளுக்கும் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட செயலாளருக்குப் பணித்துள்ளேன்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் காடுகளின் சதவீதத்தை 30 ஆக உயர்த்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் சில அரச அதிகாரிகளின் துணையுடன் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றமை அரசாங்கத்தின் அபிவிருத்தி மற்றும் நாட்டு நலன் கருத்திய திட்டங்களைக் கேள்விக்குட்படுத்தியுள்ளது.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுப்பதுடன், அரசாங்கதத்தின் மக்கள் நலன் கருதிய திட்டங்களைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக் கடற் பரப்புகள் முதலைகளின் ஆக்கிரமிப்பில்!

வெள்ளவத்தை மற்றும் தெஹிவளை முதலான பிரதேசங்களை சூழவுள்ள பகுதிகளில் உள்ள கால்வாய்களில் ஆறு முதலைகள் சஞ்சரிப்பதாக சுற்றுச்சூழல் ஆர்வலர் நயனக ரன்வெல்ல தெரிவித்துள்ளார்.

அந்த முதலைகளே கடற் பிராந்தியங்களிலும் சஞ்சரிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கடந்த செவ்வாய்க்கிழமையும் காலி முகத்திடல் கடற்கரையை அண்மித்த பகுதிகளில் சஞ்சரிக்கும் முதலை ஒன்றை அவதானித்துள்ளனர்.

கடந்த மூன்றாம் திகதி தெஹிவளை, ரயில் நிலையத்துக்கு அருகில் முதலை தாக்கி ஒருவர் உயிரிழந்ததை அடுத்து, முதலைகளின் சஞ்சரிப்பு தொடர்பாக அதிகளவில் பேசப்படுகிறது.

வெள்ளவத்தை, தெஹிவளை, கல்கிசை மற்றும் காலி முகத்திடல் கடற்பகுதிகளில் 2 முதலைகள், வனஜீவராசிரிகள் திணைக்கள அதிகாரிகளால் அவதானிக்கப்பட்டுள்ளன.

எனினும், அந்த முதலைகளை இதுவரையில் பிடிக்கவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், அந்தப் பகுதிகளில் சஞ்சரிக்கும் முதலைகள் தொடர்பாகத் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுகிறது.

# கதிர்காமம் பிரதேச சபையின் தலைவருக்கு எதிராக தடை!



கதிர்காமம் பிரதேச சபையின் தலைவரை அப்பதவியில் இருந்து இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்தி அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றம் தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

கதிர்காமம் பிரதேச சபையின் தலைவர் சானக்க அமில் ரங்கனவால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட அறிக்கை இரண்டு முறைகள் தோற்கடிக்கப்பட்டன.

அவ்வாறான சந்தர்ப்பத்தில், தலைவருக்குப் பதிலாக பிரதித் தலைவரை பதில் தலைவராக நியமிக்க வேண்டும். எவ்வாறாயினும், தலைவருக்கு அப்பதவியில் தொடர்ந்து நீடிக்கலாம் என ஊவா மாகாண ஆளுநர் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டு தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து கதிர்காமம் பிரதேச சபையின் ஏனைய உறுப்பினர்கள் அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# அரச வங்கியொன்றில் பணியாற்றுகின்ற 17 ஊழியர்களுக்கு கொரோனா தொற்று

கொழும்பில் டியூக் வீதியில் உள்ள அரச வங்கியொன்றில் பணியாற்றும் 17 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களுக்கே இவ்வாறு கொரோனா தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் குறித்த வங்கியின் தகவல் துறையின் கூடுதல் பொது மேலாளர் அனைத்து ஊழியர்களுக்கும் பிசிஆர் சோதனைகள் எதுவும் செய்ய வேண்டாம் என்றும் தங்கள் வேலையைத் தொடருமாறும் அறிவுறுத்தினார் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் வைத்தியசாலைகளில் ஊழியர்கள் பி.சி.ஆர். பரிசோதனை செய்தனர் என்றும் இது தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# மின்வெட்டால் நாட்டு மக்கள் அவதி தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள மின் தடைகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொது உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் பல சிவில் அமைப்புகளுடன் இணைந்து இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளன.

இந்த நிலையில், குறித்த முறைப்பாடு ஜனநாயக சார்பு அரசாங்கத்தின் கீழ் விசாரிக்கப்படும் என இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

திடீரென அறிவிக்கப்படாத மின்வெட்டு மூலம் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் மின் மாபியா மீது முறைப்பாடு அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்வெட்டால் மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலை உருவாகியுள்ளதாகவும் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தன்னலம் கருதாது சேவையாற்றும் இளையோரை முன்னேற்ற தமிழ் மக்கள் கூட்டணி அரும்பாடுபடும்

## நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



தன்னலம் கருதாது சேவையாற்றும் இளையோரை முன்னேற்றுவதற்கு நானும் தமிழ் மக்கள் கூட்டணியும் அரும்பாடுபடும். பெரும்பாலான இளைஞர், யுவதிகள் திடீரென அரசியலுக்கு பதவி ஆசைகாரணமாக வந்து திடீர் பணக்காரர் ஆவதற்கான வழியாக அரசியலைப் பார்க்கிறார்கள். எமது கட்சியில் அதற்கு இடமில்லை.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நீதியரசருமான க.வி.விக்னேஸ்வரன்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

**கேள்வி:-** தமிழ் மக்கள் கூட்டணி கட்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. கட்சியின் பயணம் எவ்வாறாக இருக்கப்போகின்றது? மக்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பு கட்சி ஆரம்பிக்கப்பட்ட போது இருந்திருந்தது. அத்தகைய எதிர்பார்ப்பை கட்சி நிறைவேற்றியுள்ளதா?

**பதில் :-** எங்கள் கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டம் 2019 ஜனவரி மாதம் 20 ஆம் திகதி நடந்தது. தற்போது மூன்று வருடங்கள் ஆகின்றன. இந்தக் குறுகிய காலத்தினுள் எமது கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளமை, எமக்கு ஒரு மனோ வேகத்தைக் கொடுத்துள்ளது. அந்த வேகத்தைப் பாவித்து எதிர்காலத்தில் மும்முரமாக வேலை செய்யத் திட்டமிட்டுள்ளோம்.

இன்று எங்களது கட்சி இளைஞர்கள் சிலரின் கூட்டம் நடைபெறுகின்றது. என்னால் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கட்சி, மற்றவற்றுள் இளைஞர், யுவதிகளை அரசியல் ரீதியாக முன்னால் கொண்டுவரவும் உருவாக்கப்பட்டது. 80 வயதின் பின்னர் கட்சியொன்றை ஆரம்பித்து அதன் சார்பில் நாடாளுமன்றம் ஏறியவர்கள் இதற்கு முன் வேறொருவரும் அல்லர் என்று சில காலத்திற்கு முன்னர் யாரோ சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் என்னிடம் கூறி எனக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டார். அது உண்மையோ எனக்குத் தெரியாது. ஆனால், எனது வாழ்நாள் காலம் இன்னும் நீண்ட ஒன்றாக இருக்கப் போவதில்லை. எனவே தான் தகுந்த இளைஞர், யுவதிகளை அடையாளம் கண்டு அவர்களை முன்னேற்ற நான் அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கின்றேன்.

தற்கால இளைஞர், யுவதிகள் பலர் திடீர் என்று தாங்கள் தலைவர்களாக வரவேண்டும் என்று எண்ணுகின்றார்கள். திடீர் அரசியல் பணக்காரர்களாக மாற ஆசைப்படுகின்றார்கள். நேர்மையையும் கடினமான உழைப்பையும் அணிகலன்களாகக் கொண்டு சுயநலம் களைந்து மக்கள் சேவையில் இறங்கப் பிரியப்படும் இளைஞர், யுவதிகள் மிகக் குறைவு. ஆகவே, எமது அடுத்த கட்டம் தன்னலம் கருதாத இளைஞர், யுவதிகளை எம்முடன் சேர்த்து அவர்களை அரசியலில் முன்னேற்றும் நடவடிக்கையாகவே அமையும்.

நாம் எம் கட்சியை;கிய போது பலத்த எதிர்பார்ப்பு இருந்தது உண்மை தான். ஆனால், எங்களால் படிப்படியாக இயற்கையாக வளர முடியவில்லை. கட்சியை அங்குரார்ப்பணம் செய்து சில மாதங்களுக்குள் கொரோனா பற்றிய பயம் தொடங்கிவிட்டது. எமக்கென அடிமட்ட உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது சிரமமாகப் போய்விட்டது. இவற்றையெல்லாம் விட்ட இடத்தில் இருந்து தொடர விரும்புகின்றோம்.

மேலதிகமாக நாங்கள் மக்களின் நாளாந்த தேவைகள் பற்றிக் கவனம் செலுத்த உள்ளோம். வீட்டுத் தோட்டங்கள் அமைத்தல், காளான் வளர்த்தல், தேனி வளர்த்தல் போன்ற பலவற்றை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். தேவையானவர்களுக்கு ஆடு, கோழி போன்றவற்றை வாங்கிக் கொடுத்து அவர்களிடம் இருந்து சில நன்மைகளைப் பெற செயற்றிட்டங்கள் வகுத்துள்ளோம்.

அரசியல், பொருளாதாரம், சமூகவியல் போன்றவற்றைப் பற்றிய வகுப்புகள் நடத்தவுள்ளோம். அரசியலில் சுயநலம் புகுந்ததால் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலைமை பற்றியும், பொருளாதாரத்தில் தம்மைத் தாமே நாடி தற்சார்பு நடவடிக்கைகளில் இறங்கி குடும்பங்கள் தன்னிறைவு பெற என்ன செய்யலாம் என்பது பற்றியும், சமூக ரீதியாக எவ்வாறு போதைப் பொருள் பாவனையையும் வாள்வெட்டு கலாசாரத்தையும் நிறுத்தலாம் என்பது பற்றியும் மக்களுக்கு உணர்த்தி பொதுவான விளிப்புணர்வை ஏற்படுத்த இருக்கின்றோம்.

அதே நேரத்தில் எமது கட்சியை அடிமட்டத்தில் வலுப்பெற நடவடிக்கைகள் எடுக்கவுள்ளோம். ஆகவே, வரும் நாள்கள் எமது கட்சியினருக்கு மிகவும் சுறுசுறுப்பான நாள்களாக அமையப் போகின்றன.

**கேள்வி :-** 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தக் கோரி கடிதம் எழுதியாயிற்று. வடமாகாணசபையின் முதலாவது முதலமைச்சராக இருந்துள்ளீர்கள். அத்தகைய கடிதம் தேவையானதா? இந்திய – இலங்கை நிகழ்ச்சி நிரலில் தான் 13 இனை அமுல்படுத்த கோரும் முயற்சி நடந்ததாக குற்றஞ்சாட்டப்படுகின்றதே?

**பதில்:-** கடிதம் தேவையானது. வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் நிலை நாளுக்கு நாள் மோசமாகி வருகின்றது. காணிகள் பறிபோகின்றன. சிங்களக் குடியேற்றங்கள் அதிகமாகி வருகின்றன. வடக்கு, கிழக்கின் தொடர்ச்சி இல்லாமல் செய்யப்பட்டு வருகின்றது. படையினர் பிரசன்னங்கள் கூடி வருகின்றன. சிங்கள அலுவலர்கள் அதிகளவில் இங்கு இருக்கும் திணைக்களங்களுக்கு வர ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. யாழ்.பல்கலைக்கழகம் பிற மாவட்ட மாணவ மாணவியர் அதிகமாகப் பயிலும் நிறுவனமாக மாறி வருகின்றது. மொத்தத்தில் வடக்கு, கிழக்கு மாகாண சனப்பரம்பல் மாறிக் கொண்டு வருகின்றன. இதற்கு ஒரு தடையாகவே நாம் கடிதம் எழுதி அனுப்புகின்றோம்.

இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் சேர்ந்து தற்போது அரசியல் யாப்பில் இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக அமுல்படுத்துவதாக இருந்தால் அதைச் செய்யட்டும். எமது நிரந்தரத் தீர்வுகளை சர்வதேச ரீதியாகப் பெற நாம் நடவடிக்கைகள் எடுப்போம்.

ஒற்றையாட்சியின் கீழான 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கும் எமது நிரந்தரத் தீர்வுக்கும் இடையில் சம்பந்தம் இல்லை.

**கேள்வி:-** வடக்கு, கிழக்கில் தேசியக்கட்சிகள் ஜே.வி.பி. உள்ளிட்டவை தமது அரசியலை முடக்கிவிட்டுள்ள நிலையில் தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள் உறக்க நிலையில் இருப்பதாக குற்றஞ்சுமத்தப்படுகின்றதே?

**பதில்:-** தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் சேர்ந்து ஒற்றுமையாக இயங்காத வரையில் இவ்வாறான நடவடிக்கைகள் கிழக்கில் நடைபெறுவன. கிழக்கு மாகாணத்துக்கு தமிழ் அரசியல்வாதிகளைவிட தமிழ் அரசியல் தலைவர்களே வேண்டியுள்ளனர். கிழக்கு மாகாணப் பிரச்சினைகள் வடமாகாணப் பிரச்சனைகள் போன்றவையல்ல. அவை மாறுபட்டவை. நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் இருந்த சனப்பரம்பல் அல்ல தற்போது அங்கு இருப்பது. இதனால் இனங்களுக்கிடையில் முறுகல் நிலை வளர்ந்துள்ளது. உரியவாறு சிந்தித்துச் செயலாற்றும் அரசியல் தலைவர்கள் எல்லா இனங்களுக்கிடையேயும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டால் அன்றி இன முறுகல் நிலை தொடரவே செய்யும்.

எம்மிடையே போதிய அரசியல் தலைவர்கள் இல்லாமையினால்தான் தேசியக் கட்சிகளையும் ஜே.வீ.பி போன்ற கட்சிகளையும் மக்கள் வரவேற்றனர். வடக்கில் இது தொடர்ந்தும் நடைபெறும் என்று எதிர்பார்க்க முடியாது. தேசியக் கட்சிகள் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுத் தருவதாக வாக்களித்தவற்றை தற்போது தர முடியாமல் திண்டாடுகின்றன.

எனினும் வட கிழக்கை சிங்கள மயமாக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்து வருகின்றதை நாம் மறத்தலாகாது. தமிழ், முஸ்லீம் அரசியல் தலைவர்கள் சேர்ந்தால் மற்றும் எமது தமிழ்த் தேசியக் கட்சிகள் பொது நிகழ்ச்சிநிரல் ஒன்றில் சேர்ந்தால் தேசியக் கட்சிகளும் ஜே.வீ.பீயும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுவன.

**கேள்வி:-** யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணனை உங்கள் கட்சியுடன் இணைய அழைப்பு விடுத்துள்ளீர்கள். அத்தகைய முயற்சிகள் ஏதும் முன்னெடுக்கப்பட்டுள்ளனவா?

**பதில்:-** இல்லை. ஊடகதொன்றுக்கு வழங்கிய கேள்விக்கு மணிவண்ணனுக்கு எம்முடன் சேர விருப்பமிருந்தால் சேருமாறு என்னைப் பேட்டி கண்டவர்களை அவருக்கு அறிவிக்கக் கோரினேன். அவருடன் எந்தப் பேச்சும் நடைபெறவில்லை. அவரை ஓரிரு முறைகள் தான் நான் சந்தித்துள்ளேன். அவரின் சகோதரர் என் முன் நீதிமன்றில் சமுகமளித்திருக்கக்கூடும்.

**கேள்வி :-** தெற்கில் மட்டுமல்ல வடக்கு, கிழக்கிலும் மக்கள் பொருளாதார நெருக்கடியினுள் சிக்குண்டுள்ளனர். ஆனால் தமிழ் தரப்புக்கள் இதனைப் பற்றி பெரிதாக கண்டுகொள்வதாக தெரியவில்லையே?

**பதில் :-** தமிழ் மக்களிடையே நாங்கள் இதுகாறும் அரசியல்வாதிகளையே வளர்த்து வந்துள்ளோம். அவர்கள் அடுத்த தேர்தலை ஒட்டியே தமது சிந்தனைகளை ஓடவிட்டுக் கொண்டிருப்பார்கள். தொடர்ந்து பதவியில் இருக்கவே அவர்கள் முழுமனதுடன் எத்தனிப்பார்கள். மக்களின் நெருக்கடிகளும் பிரச்சினைகளும் அவர்களுக்கு இரண்டாம் கட்டமே. அதுவும் மக்களின் நெருக்கடிகளைத் தீர்த்தால் தமக்கு தேர்தலில் என்ன நன்மை கிடைக்கும் என்றே பார்ப்பார்கள்.

நாங்கள் இரு வருடங்களுக்கு முன்னர் இருந்தே எமது தற்சார்பு, தன்னிறைவு கருத்துக்களை மக்களிடையே பரப்பி வந்துள்ளோம். இப்பொழுதும் மக்கள் பட்டினி இருக்காமல் என்னென்ன செயல்களில் ஈடுபட வேண்டும் என்று அறிவுறுத்தி வருகின்றோம். ஒரு வேளை எமது தமிழ்த் தரப்புக்கள் 'வந்தபின் காக்கும்' இரகத்தைச் சேர்ந்தவர்களோ தெரியாது. நாம் 'வரமுன் காக்க' எத்தனித்து வருகின்றோம். – என்றார்.

# மட்டு. மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய செயற்பாடுகள் குறித்து ஆராயும் கூட்டம்!

இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக வரவு – செலவு திட்டம் ஊடாக நூறு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கால்நடை இராஜாங்க அமைச்சர் கெலும் குணவர்த்தன தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு முன்னெடுக்கப்படவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது.

கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு மற்றும் பால், முட்டை சார்ந்த தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் கெலும் குணவர்த்தன தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

வரவு – செலவு திட்டம் ஊடக பால் உற்பத்தியை அதிகரிப்பதன் ஊடாக அது சார்ந்த தொழில்துறையை மேம்படுத்தல், நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு கிராமிய பொருளாதாரத்தின் பங்களிபபைப் பெற்றுக் கொள்ளல் போன்ற நோக்குடன் இந்த செயற்றிட்டத்தை ஜனாதிபதி சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டம் ஊடாக முன்னெடுத்துவருகின்றார்.

இதன்கீழ் முன்னெடுக்கப்படவேண்டிய பணிகள் தொடர்பாக ஆராயும் வகையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண விவசாய, கால்நடை, மீன்பிடி அமைச்சின் செயலாளர் கலாமதி பத்மராஜா, மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்தியர்; எம்.பஷீ உட்பட அமைச்சின் செயலாளர், உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது கட்டாக்காலி பசுக்களைப் பயன்படுத்தி பால் பெற்றுக்கொள்ளுதல், பசுக்களுக்கு தேவையான புல் பாற்றுக்குறைக்குத் தீரவைப் பெற்றுக்கொள்ளுதல், பால் பண்ணையாளர்களுக்கான கொடுப்பனவு வழங்குதல் மற்றும் வழிகாட்டல், பாற்பண்ணைகளை அதிகரித்தல், நல்லிண மாடுகளைப் பெற்றுக்கொடுத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

இலங்கையில் தினமும் 35 ஆயிரம் மில்லி லீற்றர் பாலைப் பெற்றுக்கொள்வதற்கான வகையில் அரசாங்கம் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக இதன்போது இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். இதன்போது அரசாங்கத்தின் செயற்றிட்டத்தை ஜனவரி 20 ஆம் திகதி ஆரம்பிக்கும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டதுடன் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

# ஈழ — தமிழகத் தமிழர்கள் நாம் உரிமைகளுக்காக இணைவோம்!

## ஸ்டாலினிடம் சுமந்திரன் தெரிவிப்பு அயலகத் தமிழர் நாள் நிகழ்ச்சியில்




கொழும்பு,ஜனவரி 13

ஈழத் தமிழர்களான நாங்களும், தமிழகத் தமிழர்களான நீங்களும், பிற அயலகத் தமிழ்ச் சகோதரர்களும் வெவ்வேறு நாடுகளில் வாழ்கிறோம். எனினும் அங்கங்கு எமது அரசியல் உரிமைகளுக்கான முயற்சிகளில் நாங்கள் ஒருவருக்குகொருவர் ஆதரவாகச் செயற்படுவோம்.

- இப்படி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கு பற்றிய 'அயலகத் தமிழர் நாள்' நாள் நிகழ்வில் இணைய வழியில் கருத்துரைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

தமிழ் நாடு அரசின் 'அயலகத் தமிழர் நாள்' நிகழ்வு நேற்று காலை 10 மணிக்கு முதல் தமிழ் நாடு அரசின் அயலகத் தமி ழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்வில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்டு பேருரையாற்றினார்.

தமிழக அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் உலமெங்கும் உள்ள சாதனைத் தமிழர்கள் இணைய வழியில் கலந்து கொண்டனர்.

அந்த முறைமையில் இலங்கையிலிருந்து சுமந்திரன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். அவரது உரையை நிகழ்வு நடைபெற்ற மண்ட பத்திலிருந்த தமிழக முதல்வர் ஸ்டாலினும் பிற முக்கியஸ்தர்களும் செவி மடுத்தனர்.

அப்போது சுமந்திரன் கூறியவை வருமாறு:-

ஈழத் தமிழரிடத்திலிருந்து இந்த வாழ்த்துச் செய்தியை கொண்டு வருவதில்மகிழ்ச்சி அடைகிறேன்.

அயலகத் தமிழர்கள் என்று குறிப்பிடும்போது மிக நெருக்கமாக பக்கத்தில் இருக்கின்ற ஈழத்தமிழர்களாகிய நாங்கள்தான் அதற்கு அதிகம் உரித்துடையவர்கள் என்பதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டிலிருந்து ஒரு சில கிலோமீட்டர் தூரத்தில் வாழ்கின்ற ஈழத் தமிழர்களாகிய நாங்கள், இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் செறிந்து குடி அமர்ந்திருக்கின்றோம்.

இந்த இரண்டு மாகாணங்களிலும் தமிழர்கள் தங்களுக்கு உரித்தான சுய நிர்ணய உரிமையோடு அதற்கு உகந்த ஓர் ஆட்சி முறை மாற்றத்தின்படி, தங்களைத் தாங்களே ஆளுகின்ற ஓர் அரசு கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற என்ற வேட்கையோடு, உங்களின் அயலவர்களாக - தமிழர்களாக - நாங்கள் வாழ்ந்து வருகிறோம்.

முதலமைச்சர் அவர்களே! உங்கள் தந்தையார் மாண்புமிகு மு.கருணாநிதி அவர்கள் உலகத் தமிழர்கள் எல்லோருக்கும் தலைவராக விளங்கியவர். அவரது பெரும் பணியை - அவர் எங்களோடு வைத்திருந்த நட்பை - நாங்கள் மீட்டுப் பார்க்க வேண்டிய ஒரு கட்டாய தேவை இந்த வேளையிலே இருக்கின்றது. அதனை நன்றி உணர்வோடு நாங்கள் நினைவு கூர்கின்றோம்.

அப்படியான ஒரு ஸ்தானத்துக்கு, இந்த அயலவர் தமிழர் திருநாளை கொண்டாடுவதன் மூலம், அதற்கான பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து, நீங்கள் தமிழ்நாட்டுக்கு வெளியே உலகெங்கும் வாழும் தமிழர்களைத் திரட்டி, அனைத்து தமிழர்களுக்கும் தலைமைத்துவம் கொடுக்கின்றீர்கள்.

இந்த முயற்சியில் உங்கள் தந்தையாருடைய பாத அடிகளை நீங்கள் தொடர்ந்து வருகின்றீர்கள் என்பதை காண்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். உங்களின் இந்த மகத்தான பணி வெற்றி பெற வேண்டும் என்றும், அதன் மூலம் உலக தமிழர்கள் எல்லோரும் ஒன்றாகத் திரண்டு எங்கள் தாய் மொழியையும், தமிழ் கலாச்சாரத்தையும், நாங்கள் மென்மேலும் வளர்க்கத் தக்கதாக அது அமைய வேண்டும் என்றும் வாழ்த்துகிறோம்.

நாங்கள் எங்களுக்குள் ஒருவருக்கொருவர் உதவியாக - அது கலை, கலாச்சாரமாக இருக்கட்டும் - தமிழ் மொழி வளர்ப்பிலாக இருக்கட்டும் - நாங்கள் வாழுகின்ற நாடுகளில் எங்களுக்கு உரித்தான அரசியல் உரிமைகளாக இருக்கட்டும் அந்த விடயங்களில் நாங்கள் இணைந்தவர்கள், 'தமிழால் இணைவோம்' என்ற இந்நிகழ்வின் ஊடாக கூட நாம் அதனை வலியுறுத்துகிறோம்.

விசேடமாக தமிழக முதல்வருக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே ஈழத் தமிழர்களின் சார்பில் எங்கள் பெருநன்றியைத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு எனக்கு உள்ளது. எங்கள் தேசத்தில் இருந்து ஏதிலிகளாக இடம்பெயர்ந்து, உங்கள் நாட்டில் பல தசாப்தங்களாக வாழுகின்ற எங்கள் உறவுகளுக்கு நீங்கள் தொடர்ச்சியாக வழங்கி வருகின்ற பல நல்ல திட்டங்களுக்கு நாங்கள் என்றும் நன்றியாக இருக்கின்றோம். நீங்கள் முதலமைச்சர் பதவியை எடுத்த காலம் முதல் அவர்களை உங்களில் ஒரு பகுதியினராக நினைத்து, அவர்களுக்காகப் பெரும் நிதி ஒதுக்கீடு செய்து, பல நல்ல திட்டங்களை முன்னெடுத்து இருக்கிறீர்கள். அவர்களின் நலன்களை மிகுந்த அக்கறை கொண்டு கவனித்து வரும் உங்களுக்கு அவர்களின் உறவுகளான நாங்கள் இங்கு எங்கள் நாட்டிலிருந்து பெரு நன்றியை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த முயற்சி மூலமாக - இந்த நிகழ்ச்சி மூலமாக - நாங்கள் ஒன்றி ணைந்து வருகின்ற இந்த நடவடிக்கை மூலமாக - உலகத் தமிழர்கள் ஒன்றாக சேர்ந்து எங்களுக்கு உரிய இடத்தை உலக வரைபடத்தில் நாங்கள் நிலை நிறுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு கிட்டும். இந் நிகழ்ச்சி அதற்கு பேருதவியாக இருக் கும். இதற்கு அடித்தளமிட்ட தமிழக முதலமைச்சருக்கும், அவரது அரசுக்கும், அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இலங்கை தமிழ் மக்கள் சார்பில் நன்றியையும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். - என்றார் சுமந்திரன்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி.கே.எஸ்.மஸ்தான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுமந்திரனுடன் மலேசியா, அமெரிக்கா, பப்புவா நியூகினியா, மொரிஷியஸ், லண்டன் ஆகிய இடங்களில் இருந்து தலா ஒவ்வொரு சாதனைத் தமிழர்கள் தலா ஐந்து நிமிட நேரம் வாழ்த்துரை வழங்கினர்.

நேற்றைய காலை அமர்வின் கடைசி நிகழ்வாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் விழாப் பேருரை இடம் பெற்றது.

## பிறந்தநாளில் நல்லூர்க் கந்தனை தரிசித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(இ.கலையமுதன்)

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக் கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ நேற்று காலை வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

வடக்கு மாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டு வருகின்றார்.

இந்தநிலையில், சஜித் பிரேமதாஸவின் பிறந்த நாளான நேற்று காலை காலை 10 மணியளவில் அவர் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

## 16இல் மலையகத்தில் பொங்கல் விழா; சஜித், பாக்லே சிறப்பு விருந்தினர்கள்!

தொழிலாளர் தேசிய சங்கம் ஏற்பாடு செய்துள்ள தைப்பொங்கல் விழா நுவரெலியா சினிசிட்டா மைதானத்தில் எதிர் வரும் 16 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தைப்பொங்கல் விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கைக்கான இந்தியத்தூதுவர் கோபால் பாக்லே ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

### அரச நிறுவனங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அமைச்சரவை அந்தஸ்துள்ள அனைத்து அமைச்சர்களுக்கும் அறிவித்துள்ளார் என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள அரசின் செலவுகளை முகாமைத்துவப்படுத்தும் மட்டுப்படுத்தல்களுக்கு மேலதிகமாக இவ்வாறு அரச நிறுவனங்களின் செலவுகளைக் குறைத்துக் கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்து அதன்மூலம் நிதி அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் கவனத்தில்கொண்டு செலவினங்களைக் குறைப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வரும் நிலையில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அமைச்சரவைப் பத்திரம் மூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

கடந்த வருடமும் அரசின் செலவினங்கள், வீண்விரயங்கள் குறைக்கப்பட்டு பல கோடி ரூபா சேமிக்கப்பட்டது தெரிந்ததே. ஜனாதிபதியும் தனது செலவினங்களைக் குறைத்திருந்தார்.

### மன்னாரில் தயாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கைக்குண்டு 13 வயது சிறுவர் ஒருவரின் ஊடாக குறித்த தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்தது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

வெப்பம் அடையும் பட்சத்தில் வெடிக்கும் வகையில் இந்தக் கைக்குண்டு தயாரிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் நேற்றுமுன்தினம் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் பிரதான சந்தேகநபர் எனத் தெரியவந்திருந்தது.

இதையடுத்து அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

### முற்றவெளியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளது.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகெங்கும் வாழும் தமிழர்கள் தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடவிருக்கின்ற வேளையில் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்கள் இரத்தக் கண்ணீர் வடித்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில், அவர்கள் வாழ்வில் ஒளியேற்றவும், அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டியும், விடுதலைப் பொங்கலுக்கு மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் என அனைவரும் கலந்துகொள்ளுங்கள்.

அரசியல் கைதிகளின் உறவுகள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள். கடந்த காலத்தில் ஒருசில அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டு அவை பெரியளவில் காட்டப்பட்டன. ஆனால், அதற்குப் பின்னர் எதுவும் நடக்கவில்லை .

கடந்த வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட அரசியல் கைதிகளின் விடுதலை புதிய ஆண்டிலாவது இடம்பெற வேண்டும் - என்றார்.

### முழுமையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சை செய்து கொண்ட பெண் கிருமித் தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

புற்றுநோய் காரணமாக கர்ப்பப்பையை அகற்றும் சத்திரசிகிச்சை முன்னெடுக்கப்பட்ட நிலையில் அவரது உடலில் துணி ஒன்று வைத்துத் தைக்கப்பட்டதால் கிருமித் தொற்று ஏற்பட்டுள்ளது. அதுவே உயிரிழப்புக்குக் காரணம் என சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் பொன்னுத்துரை கிரிஷாந்தன், உயிரிழந்த பெண்ணின் சடலத்தைத் தகனம் செய்யாது அடக்கம் செய்ய உத்தர விட்டார்.

அத்துடன், தனியார் மருத்துவமனையில் பணிப்பாளர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி உள்ளிட்டோரை இன்று நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் நீதிவான் உத்தர விட்டார்.